# ரூ. 6.30 கோடியில் மதுரை கோட்டத்திற்குட்பட்ட தேனியில் ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டிடம் கட்டப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் பி.மூர்த்தி பதிலுரை...

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளும் வகையில், அவர்களுடைய பெயர் மற்றும் வில்லை எண் (Token Number) காட்சிப்படுத்தப்பட்டு, ஒலிபெருக்கி மூலம் அழைக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, இத்திட்டம் 3.32 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பதிவுக்கு வரும் பொதுமக்கள் வில்லை எண் அடிப்படையில் தங்களுடைய வரிசை முறையினை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

கணினிமயமாக்கல் காலத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை பொதுமக்கள் எளிதில் பெற்றுக்கொள்ளும் வகையில், பத்திர பதிவுத்துறை தொடங்கப்பட்ட 1865-ஆம் ஆண்டு முதல் 5.7.2009 வரை பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் ஸ்கேன் செய்யப்பட்டு மத்திய சேவையகத்திற்கு மாற்றப்பட்டது.1865 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் இணைய வழியில் வழங்கும் திட்டம் முதலமைச்சர் அவர்களால் 17.2.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடங்கி வைத்தது முதல் நாளது தேதி வரை ஏறத்தாழ 2.52 லட்சம் நகல்கள் பொதுமக்களுக்கு கணினி வாயிலாக வழங்கப்பட்டு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

சொத்து பதிவில் வில்லங்க சான்று என்பது மிகவும் முக்கியமானது. பொதுமக்கள் நலன் கருதி பத்திரப்பதிவு முடிந்த மறுநாளே சொத்துக்களை எழுதி பெறுபவரின் கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக சொத்தின் வில்லங்க சான்று விபரங்கள் அனுப்பும் திட்டம் 19.2.2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் தங்கள் கைபேசியில் பெறும் குறுஞ்செய்தி மூலம் வில்லங்க சான்றின் விபரங்களை பதிவிறக்கம் செய்து சரி பார்த்துக் கொள்ளலாம். மேலும் அசல் பத்திரத்தை ஒப்பிட்டுப் பார்த்து வில்லங்க சான்றில் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்பட்டால், அதனை உடனடியாக இணைய வழியில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இணைய வழி பதிவு செயல்முறையின் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் விதமாக, வில்லங்க சான்று மற்றும் திருமண பதிவு சான்றில் திருத்தங்கள் ஏதேனும் தேவைப்படும் நேர்வுகளில், எங்கிருந்தாலும் இணைய வழியாகவே திருத்தம் கோரும் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.ிரும இணைய வழியில் திருத்தங்கள் கோரி பதிவு செய்த பிறகு தொடர்புடைய சார்பதிவாளர் அதனை கூர்ந்து ஆய்வு செய்து, மாவட்ட பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்புவார். அவர்களின் ஒப்புதலுக்கு பிறகு அந்த திருத்தங்கள் சான்றிதழ்களில் உடனடியாக பிரதிபலிக்கும். இந்த முயற்சியின் முக்கிய அம்சம் என்னவென்றால் பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரடியாக வருவதை தவிர்ப்பதோடு, அவர்களின் பயணச் செலவு மற்றும் நேரத்தையும் குறைப்பதாகும்.

அடுத்த தலைமுறை கணினிமயமாக்கல் வரிசையில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஸ்டார் 2.0 திட்டத்தின் மறுசீரமைப்பாக, புதிய தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஸ்டார் 3.0 திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அத்திட்டத்திற்கான ஆலோசகரை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தேர்வு செய்துள்ளது. இப்பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஸ்டார் 3.0 திட்டத்தின் மூலமாக பதிவிற்கு வரும் பொது மக்களின் நலனை மையமாகக் கொண்டு, தற்போதைய காலகட்டத்தில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, பல்வேறு சிறப்பு அம்சங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்த இந்த அரசு உறுதி கொண்டிருக்கிறது.

அரசு புறம்போக்கு நிலங்கள், இந்து சமய அறநிலையத்துறை, வக்ஃப் போர்டு, உள்ளாட்சி அமைப்பு ஆகியவற்றிற்கு சொந்தமான நிலங்கள், நீர் நிலைகள் மற்றும் இதர தடை செய்யப்பட்ட நிலங்கள் தொடர்பான மோசடிப் பதிவுகளை ஆரம்ப நிலையிலேயே தடுக்கும் வகையில் கணினியில் மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டது. பதிவுத்துறையின் மென்பொருள், வருவாய் துறையின் தமிழ்நிலம் மென்பொருளோடு நிகழ்நேரத்தில் விவரங்கள் ஒப்பிட்டு சரிபார்ப்பதோடு, இவை பதிவிற்கு தடை செய்யப்பட்ட நிலங்கள் என தெரிவிப்பதுடன் ஆவணப்பதிவு மேற்கொள்ள டோக்கன் வழங்குவதையும் அனுமதிக்காது. இவ்வாறு தடை செய்யப்பட்ட நிலங்கள் பதிவு செய்யப்படுவதை தடுக்கும் இத்திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் மட்டும் பதிவுத்துறைக்காக மூன்று மாவட்ட பதிவாளர் அலுவலக கட்டடங்கள் மற்றும் 24 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்கள் 33.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் 76 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 145.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன.

பதிவுத்துறையின் சேவைகள் தொடர்பான தெளிவுரைகள், பதிவு குறித்த விபரங்கள் ஆகியவற்றை யூ-ட்யூப் காணொளி, வாட்ஸ் அப் மூலம் வழங்கிட முடிவு செய்யப்பட்டு பதிவுத்துறை இணையதளத்தில் இத்தகைய சேவைகளை விளக்கும் காணொளிகள் வெளியிடப்பட்டு உள்ளன.

வணிகவரித்துறையும், பதிவுத்துறையும், அரசுக்கு வரும் வருவாயை ஈட்டித்தருவதில் முக்கியப் பங்காற்றி வரும் நிலையில், இத்துறையின் நடவடிக்கைகளை மேலும் மெருகேற்றி, இன்னமும் கூடுதலாக வரி வருவாயை பெருக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில், கழக அரசு முனைப்புடன் உள்ளது.

வணிகவரி மற்றும் பதிவுத் துறையில் இந்த ஆண்டு எடுக்கப்படவுள்ள பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் மூலம், இதுவரை இல்லாத அளவில் வணிகவரித்துறையும், பதிவுத்துறையும், கடந்த ஆண்டுகளில் வருவாய் ஈட்டிய, அதே சரித்திரத்தை தொடர் சரித்திரமாக்கிடும் வகையில் செயல்படும் என்பதை மீண்டும் ஆணித்தரமாக உறுதிபட இம்மாமன்றத்தில் பதிவு செய்து கொண்டு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்

வணிகவரித்துறை அலுவலகங்களில் பணி செயல்பாடுகள் ரூ.5.48 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

வணிகவரித்துறை அலுவலகங்களில் பணி செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காக, துறைக்கென்று தனியாக இரண்டாம் நிலையில் மேம்படுத்தப்பட்ட தொடரமைப்பு இணைப்பை வழங்குதல் (Secondary Network Connectivity), அனைத்து குறும்பரப்பு வலையமைப்பு இணைப்பை (LAN Connectivity) மாற்றியமைத்தல், கணினி உபகரணங்களான திசைவி (Router), சொடுக்கி (Switches), தடங்கல் இல்லா ஆற்றல் வழங்கி (UPS) போன்றவை அமைத்தல் மற்றும் தொடரமைப்பு கம்பிவடம் (Networking Cable) ஆகியவற்றை மாற்றியமைத்தல் போன்ற பணிகளை ரூ.5.48 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

2) வணிகவரித்துறையிலுள்ள ஏழு மண்டல பயிற்சி மையங்களில் கணினி வழி பயிற்சி வழங்குவதற்கு தேவையான கணினி உபகரணங்கள் ரூ.4.93 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்.

வணிகவரித்துறையிலுள்ள ஏழு மண்டல பயிற்சி மையங்களில் அலுவலர்களுக்கு கணினி வழி பயிற்சி வழங்குவதற்கு தேவையான கணினி அச்சுப்பொறி மற்றும் துறையிலுள்ள உயர் அலுவலர்களுக்கு தேவையான கணினிகள், மடிகணினிகள் மற்றும் சிறு கணினிகள் ரூ.4.93 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்

3) கடலூர் கோட்டத்திற்குட்பட்ட பழமையான நிலையில் உள்ள கடலூர் ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடத்தினை இடித்து புதிய வணிகவரி கட்டடம் ரூ.23.00 கோடி செலவில் கட்டப்படும்.

48 ஆண்டுகள் பழமையான கடலூர் ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடம் மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதால், அக்கட்டடத்தினை முழுமையாக இடித்து, கடலூர் கோட்டத்திற்குட்பட்ட ஏழு அலுவலகங்கள் [இணை ஆணையர் (மாநில வரி), இணை ஆணையர் (நுண்ணறிவு), துணை ஆணையர் (மாநில வரி), மேல்முறையீட்டு துணை ஆணையர், உதவி ஆணையர் (மாநில வரி) (நகரம்), உதவி ஆணையர் (மாநில வரி) (புறநகர்), உதவி ஆணையர் (மாநில வரி) / துறைப்பிரதிநிதி கடலூர்] மற்றும் ஒரு பயிற்சி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடம் ரூ.23.00 கோடி செலவில் கட்டப்படும்.

4) திருவள்ளூர் கோட்டத்திற்குட்பட்ட அலுவலகங்களுக்கு புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.22.00 கோடி செலவில் கட்டப்படும்.

வணிகவரித்துறை மறுசீரமைப்புக்குப் பின் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருவள்ளூர் கோட்டத்திற்குட்பட்ட பதினைந்து அலுவலகங்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017 அமலுக்கு வந்ததையொட்டி பயன்பாட்டில் இல்லாத புழல் (வெளி) சோதனைச் சாவடி அமையப்பெற்ற இடத்தில், புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.22.00 கோடி செலவில் கட்டப்படும்.

5) சேலத்தில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டட வளாகத்தில் சேலம் நுண்ணறிவு கோட்டத்திற்கு புதிய கட்டடம் ரூ.9.84 கோடி செலவில் கட்டப்படும்.

சேலம் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடத்தில் இயங்கிவரும் சேலம் நுண்ணறிவுக் கோட்டத்திற்குட்பட்ட அலுவலகங்கள் இயங்க இடப்பற்றாக்குறை உள்ள காரணத்தினால் தற்போது சேலத்தில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டட வளாகத்தில் சேலம் நுண்ணறிவுக் கோட்டத்திற்கு புதிய கட்டடம் ரூ.9.84 கோடி செலவில் கட்டப்படும்.

6) சேலம் கோட்டத்திற்குட்பட்ட மூன்று வரி விதிப்பு வட்டங்களுக்கு ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.6.00 கோடி செலவில் கட்டப்படும்.

சேலம் கோட்டத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மூன்று வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு [திருச்செங்கோடு (நகரம்) திருச்செங்கோடு (ஊரகம்), பள்ளிப்பாளையம் அலுவலகம்] நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில், புதிதாக ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.6.00 கோடி செலவில் கட்டப்படும்.

7) மதுரை கோட்டத்திற்குட்பட்ட பழமையான நிலையில் உள்ள வணிகவரி வளாக இணைப்பு கட்டடத்தினை இடித்து புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.6.30 கோடி செலவில் கட்டப்படும்.

40 ஆண்டுகள் பழமையான மதுரை வணிகவரி வளாக இணைப்பு கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால், அக்கட்டடத்தினை முழுமையாக இடித்து, இணை ஆணையர் (சட்டம்), உதவி ஆணையர் (மாநில வரி), மேலவெளிவீதி வரி விதிப்பு வட்ட அலுவலகங்கள் மற்றும் அலுவலக வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதியுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.6.30 கோடி செலவில் கட்டப்படும்.

8) மதுரை கோட்டத்திற்குட்பட்ட தேனியில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.6.30 கோடி செலவில் கட்டப்படும்.

தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மூன்று அலுவலகங்களுக்கு [தேனி துணை ஆணையர் (மா.வ) அலுவலகம், போடிநாயக்கனூர் மாநில வரி அலுவலகம் மற்றும் உத்தமபாளையம் ட்மாநில வரி அலுவலகம்] தேனி வட்டத்திலுள்ள வணிகவரித் துறைக்கு சொந்தமாக உள்ள இடத்தில், புதிதாக வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.6.30 கோடி செலவில் கட்டப்படும்.

9) விருதுநகர் கோட்டத்திற்குட்பட்ட அலுவலகங்களுக்கு விருதுநகர் (நுண்ணறிவு) கோட்ட ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடத்தில் கூடுதல் தளங்கள் ரூ.4.60 கோடி செலவில் கட்டப்படும்.

45 ஆண்டுகள் பழமையான இணை ஆணையர், விருதுநகர் அலுவலக ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், அக்கோட்டத்திற்குட்பட்ட ஐந்து அலுவலகங்களுக்கு விருதுநகர் (நுண்ணறிவு) கோட்ட ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடத்தில் கூடுதல் தளங்கள், ரூ.4.60 கோடி செலவில் கட்டப்படும்.

10) காஞ்சிபுரம் கோட்டத்திற்குட்பட்ட அலுவலகங்களுக்கு காஞ்சிபுரத்தில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.4.20 கோடி செலவில் கட்டப்படும்.

வணிகவரித் துறையின் மறுசீரமைப்பிற்குப் பின் புதிதாக உருவாக்கப்பட்டு, தற்போது சென்னையில் இயங்கி வரும் காஞ்சிபுரம் கோட்டத்திற்குட்பட்ட, மூன்று அலுவலகங்களுக்கு காஞ்சிபுரத்தில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.4.20 கோடி செலவில் கட்டப்படும்.

11) மதுரையில் உள்ள பிராந்திய கோட்ட வணிகவரி பணியாளர் பயிற்சி நிலைய கட்டடம் ரூ.3.29 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு, அக்கட்டடத்திற்கு கூடுதலாக ஒரு தளமும் அமைக்கப்படும்.

2010-ஆம் ஆண்டு கட்டப்பட்ட மதுரை பிராந்திய கோட்ட வணிகவரி பணியாளர் பயிற்சி நிலைய கட்டடத்தின் தரை தளத்தை புனரமைப்பதுடன், கூடுதலாக ஒரு தளம் ரூ.3.29 கோடி செலவில் கட்டப்படும்.

12) வேலூர் கோட்டத்திற்குட்பட்ட ஆம்பூர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.70 கோடி செலவில் கட்டப்படும்.

தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் ஆம்பூர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், கீழ்முருங்கை ஊராட்சியில் புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.70 கோடி செலவில் கட்டப்படும்.

13) திருச்சி கோட்டத்திற்குட்பட்ட அறந்தாங்கி மாநில வரி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.52 கோடி செலவில் கட்டப்படும்.

தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் அறந்தாங்கி மாநில வரி அலுவலர் அலுவலகத்திற்கு புதுக்கோட்டை மாவட்டம், இரத்தினக்கோட்டை கிராமத்தில் புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.52 கோடி செலவில் கட்டப்படும்.

14) விருதுநகர் கோட்டத்திற்குட்பட்ட பரமக்குடி மாநில வரி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.38 கோடி செலவில் கட்டப்படும்.

தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் பரமக்குடி மாநில வரி அலுவலர் அலுவலகத்திற்கு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், எஸ்.அண்டக்குடி கிராமத்தில் புதிய வணிகவரி அலுவலக கட்டடம் ரூ.1.38 கோடி செலவில் கட்டப்படும்.

15) சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு இணைப்பு கட்டடத்தில் இயங்கி வரும் இரண்டு மின் தூக்கிகள் ரூ.59 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு இணைப்பு கட்டடத்தில் இயங்கி வரும் சுமார் 13 வருடங்கள் பழமையான இரண்டு மின் தூக்கிகள் ரூ.59 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

16) ஈரோடு கோட்டத்திற்குட்பட்ட கரூர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடத்தில் பராமரிப்பு பணிகள் ரூ.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

31 ஆண்டுகள் பழமையான கரூர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடத்தில் ஐந்து வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இக்கட்டடத்தில் ரூ.26 இலட்சம் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

17) பதிவுத்துறைக்கு ரூபாய் 100 கோடி செலவில் 36 புதிய பதிவுத்துறை அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

2024-25 ஆம் நிதியாண்டில் ரூபாய் 100 கோடி செலவில்

36 புதிய அலுவலக கட்டடங்கள் நவீன மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கட்டப்படும்.

18) கும்பகோணம் மற்றும் விருத்தாச்சலம் பதிவு மாவட்டங்களில் மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) பணி அமைப்புகள் உருவாக்கப்படும்.

பதிவுத்துறையில் தற்போது 56 நிர்வாக மாவட்டப்பதிவாளர் பணியிடங்களும் 54 தணிக்கை மாவட்டப்பதிவாளர் பணியிடங்களும் உள்ளன. தணிக்கை பணியமைப்புகள் இல்லாத கும்பகோணம் மற்றும் விருத்தாச்சலம் பதிவு மாவட்டங்களில் தணிக்கை மாவட்டப்பதிவாளர் பணியமைப்புகள் தொடரும் செலவினமாக ரூ.58.73 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.32.87 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

19) பணிப்பளு மிகுந்த சார்பதிவாளர் அலுவலகங்களை பிரித்து புதியதாக 7 சார்பதிவாளர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள சில சார்பதிவாளர் அலுவலகங்களில் அதிக எண்ணிக்கையிலான ஆவணங்கள் பதிவாகி வருகின்றன. அதனால் ஏற்படும் பணிப்பளுவினை குறைக்கவும், பொதுமக்களின் சேவையை விரைவாக பூர்த்தி செய்யவும், பொதுமக்களின் நலன் கருதியும், பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சீரிய சேவை செய்யும் நோக்குடனும் பணிப்பளு மிகுந்த சார்பதிவாளர் அலுவலகங்களை பிரித்து புதியதாக 7 சார்பதிவாளர் அலுவலகங்கள் தொடரும் செலவினமாக ரூ.92.80 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.90.43 இலட்சம் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்.

20) பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கென LAN இணைப்பு ஏற்படுத்தப்படும்.

பதிவுத்துறை தலைவர் அலுவலகமானது துறை தலைமை அலுவலகமாகவும் ஸ்டார் திட்ட அருகாமை பேரிடர் மீட்பு மையமாகவும் (NLDR) திட்ட மென்பொருள் சம்பந்தமான புகார்கள்/ சந்தேகங்களுக்கான தீர்வு நடவடிக்கைகளுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் திருவாளர்கள் டிசிஎஸ் (TCS) நிறுவனத்தின் உதவி மையம் (help desk/call centre) நிறுவப்பட்டு செயல்படுவதாலும் துறை ரீதியான புகார்கள் பொறுத்து கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டு செயல்படுவதாலும் அலுவலக மைய மற்றும் இணைப்புக் கட்டடங்களில் அடுக்கக தளத்தில் பதிவுத்துறை தலைவர் முதல் பதிவறை எழுத்தர் வரையும் திட்ட ஒருங்கிணைப்பாளரது அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தகவல் தொகுப்பு பணியாளர்களும் பணிபுரிவதால் மின் அலுவலகம் (e-office), ஸ்டார் 2.0, அச்சு இயந்திரம் பங்கு கோப்புகள் (shared files) போன்றவைகளுக்கு ஒரு கம்பி இணைப்பற்ற LAN இணைப்பு (Wi Fi enabled LAN) அத்தியாவசியமாகிறது. எனவே பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் ரூ.28.54 இலட்சம் மதிப்பீட்டில் LAN இணைப்பு ஏற்படுத்தப்படும்.

21) தணிக்கை மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் பொதுப் பணித் துறையில் இருந்து பகராண்மையில் நியமனம் செய்யப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோருக்கு புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

54 தணிக்கை மாவட்டப் பதிவாளர்களில் 50 தணிக்கை மாவட்டப்பதிவாளர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 26.04.2022-ல் புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு பதிவு மாவட்டங்களின் தணிக்கை மாவட்டப்பதிவாளர்களுக்கு நான்கு வாகனங்கள் மற்றும் பதிவுத்துறையில் கட்டட களப்பணிக்காக பகராண்மையில் சென்னை மற்றும் மதுரையில் பணிபுரியும் பொதுப்பணித்துறையின் இரண்டு உதவி செயற்பொறியாளர்களுக்கு இரண்டு வாகனங்கள் ஆக மொத்தம் ஆறு வாகனங்கள் ரூ.52.21 இலட்சம் செலவில் வாங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் வருடத்திற்கு ரூ.29.52 இலட்சம் ஆகும்.

22) அரசு கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்களின் கட்டமைப்புகள் நவீனப்படுத்தப்படும்.

பதிவுத்துறையில் சார்பதிவாளர் அலுவலகங்களின் அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நவீனப்படுத்தபடும். 2024-25-ஆம் நிதியாண்டில் 25 சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் 2024-25-ஆம் நிதியாண்டில் தொடரா செலவினமாக ரூ. 10 கோடி அரசுக்கு செலவாகும்.

23) சென்னை இராஜாஜி சாலையில் உள்ள பாரம்பரிய கட்டடத்தில் பதிவுத்துறைக்கு நவீன கூட்ட அரங்கம் (CONFERENCE HALL) மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

பதிவுத்துறையில் மாதந்தோறும் துணைப்பதிவுத்துறை தலைவர்கள், நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள், தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் பங்கேற்கும் பணிச்சீராய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கென போதிய இடவசதியுடன் கூடிய நவீன கூட்ட அரங்கம் சென்னை இராஜாஜி சாலையில் அமைந்துள்ள பதிவுத்துறைக்கு சொந்தமான கட்டடத்தில் ரூ.125 இலட்சம் செலவில் அமைக்கப்படும். மேலும், இத்துறையின் தொன்மை மற்றும் சிறப்புகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், இத்துறையில் பயன்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் தொன்மையான ஆவணங்கள், பொருட்கள் ஆகியவற்றினை காட்சிப்படுத்தும் வகையில் அப்பாரம்பரிய கட்டடத்தில் ரூ.52 இலட்சம் செலவில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

இவ்வருங்காட்சியகத்தில் பதிவுத்துறையின் பயன்பாட்டில் இருந்த புராதான பொருட்களான முத்திரைகள், தராசு மற்றும் எடைக்கற்கள், புராதான இரும்பு பெட்டகங்கள், தோள்பைகள், துளையிடும் கருவிகள், புராதான கைரேகை பெட்டிகள், இரும்பு அட்டங்கள், புராதான தட்டச்சு இயந்திரங்கள், கைவிளக்குகள் மற்றும் இதர புராதான பொருள்கள் போன்றவை காட்சிப்படுத்தப்படும்.

இந்த மானியக் கோரிக்கைகளில் உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்தில் கூறிய பெரும்பாலான கருத்துக்களுக்கு எனது பதிலுரையில் உரிய விளக்கங்கள் இடம் பெற்றிருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும், உறுப்பினர்கள் கூறிய பிற கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, அவற்றை நன்கு பரிசீலித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆகவே, உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் உள்ளதால் பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை திருப்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு உறுப்பினர்களை தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் தொடர்பான பணிகளில் எனக்கு உறுதுணையாக இருந்த அரசு தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா IAS அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. நா. முருகானந்தம் IAS அவர்களுக்கும், நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.T.உதயச்சந்திரன் IAS அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் டாக்டர் P.உமாநாத் IAS அவர்களுக்கும், திரு.M.S.சண்முகம் IAS அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ் IAS அவர்களுக்கும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பிரஜேந்திர நவ்நீத் IAS அவர்களுக்கும், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன் IAS அவர்களுக்கும், பதிவுத்துறை தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் IAS அவர்களுக்கும் மற்றும் முதலமைச்சரின் தனிச்செயலாளர் திரு. தினேஷ் அவர்களுக்கும்,

இரு துறைகளின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளராகப் பணியாற்றி, தற்போது மாநில தேர்தல் ஆணையராகப் பதவி வகித்து வரும் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி IAS அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வணிகம் மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

---

### தேர் சாய்ந்த விபத்தில் உயிரிழந்த

# அறந்தாங்கி மகாலிங்கம் குடும்பத்திற்கு ஆறுதல் - ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே ராமசாமிபுரம் கிராமத்தில் நடைபெற்ற கோவில் திருவிழாவில் தேரின் கலசம் தவறி விழுந்து தேர் சாய்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தின ருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் ஆறுதல் தெரிவித்து நிதி உதவி அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ராமசாமிபுரம் கிராமத்திலுள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவிலில் கடந்த 24.6.2024 அன்று மாலை தேரோட்டத்திற்காகத் தேரை தயார் செய்யும் பணி நடைபெற்றபோது, தேரின் மேற்பகுதியில் கலசத்தை பொருத்துகையில், கலசம் தவறிவிழுந்து தேர் ஒருபுற மாகச் சாய்ந்ததால் எதிர் பாராத விதமாக கீழே தவறிவிழுந்த விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாத்தூர், ராமசாமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது 70) த/பெ.சபாபதி என்பருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக் காக பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர் களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த வரின் குடும்பத்தி னருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.